1984 மார்ச் 27]

பெற்று வந்தாலே போதும், மறுபடியும் அவர்களைப் பொறுத்த வரையில் போலீஸ் வெரிபிகேஷன் தேவையில்லை என்று அரசு உத்தரவு வழங்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் நல்ல யோசனையை அரசு ஏற்கனவே ஆய்ந்து நடைமுறைக்குக் கொண்டு வர உள்ளது.

(முற்பகல் 9.50)

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, சிறையிலிருந்து கைதிகளை கோர்ட்டுக்கு அழைத்து வரும்போது அவர்களுக்கு ஒரு வேளைக்கு 75 காசுதான் உணவுக்காகக் கொடுக்கப்படுகிறது. விலைவாசி உயர்ந்திருக்கிற இந்த நாளில் விலைவாசிக்கு ஏற்ப 75 காசு என்பதை உயர்த்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

(பதில் இல்லை).

பள்ளிப்பட்டு மற்றும் திருத்தணி பகுதிகளைத் தொழில் துறையில் பிற்படுத்தப்பட்ட வட்டங்களாக அறிவிக்கும் திட்டம்

*474—(வினா எண். 18287) திரு. பூ. மு. நரசிம்மன் : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

செங்கை மாவட்டம், பள்ளிப்பட்டு மற்றும் திருத்தணி பகுதிகள் தொழில் துறையில் பிற்படுத்தப்பட்ட வட்டங்களாக அறிவிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இல்லை.

திரு. பூ. மு. நரசிம்மன் : தலைவரவர்களே, பள்ளிப்பட்டு வட்டத்தில் 5 பேர்கள் சேர்ந்து செய்யக்கூடிய தொழில் ஒன்றும் இல்லை என்பதை அரசு நன்கு அறியும். மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் கூட பள்ளிப்பட்டு, திருத்தணி வட்டங்களை பிற்பட்ட பகுதிகளாக அறிவிக்க வேண்டுமென்று அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. எனவே அரசு இதை மறுபரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் செம்மலை அவர்கள் கேட்ட கேள்விக்குப் பதில் கூறும்போது குறிப்பிட்டதைப்போல மத்திய அரசு மானியமும், மாநில அரசு மானியமும் ஒருங்கே வரக்கூடிய பகுதிகள் சிலவற்றை மத்திய அரசு மானியத்திற்கு மட்டும் தகுதி உடையவை என்று அறிவித்து, மாநில அரசு மானியத்தை மற்ற பகுதிகளுக்கு விரிவுபடுத்தும் செயற்குறிப்பு பரிசீலனையில்

இருக்கிறது. அப்படி விரிவுபடுத்தும்போது மேலும் ஏறத்தாழ 22 வட்டங்கள் பின்தங்கிய பகுதிகளாக அறிவிக்கப்பட்டு சலுகைகள் பெற தகுதி உடையவை ஆகும். அப்படி அறிவிக்கப்படவிருக்கிற வட்டங்களில் பள்ளிப்பட்டு வட்டம் வருமா, அதற்குப் பொருந்துமா என்பதை ஆராய்ந்துப் பார்த்து, அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : தலைவரவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தில் எந்த எந்த வட்டங்கள் பின்தங்கிய வட்டங்கள் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தைப் பொறுத்தவரையில், ‘‘ பிரையாரிட்டி இன்டஸ்ட்ரீஸ் ’’ என்று சொல்லப்படுகின்ற எலெக்ட்ரானிக்ஸ், ஷெட்யூல்டு டிரக்ஸ், ஆட்டோமோபைல் ஆன்சிலரி இன்டஸ்ட்ரீஸ், சோலார் எனர்ஜி பேஸ்டு இன்டஸ்ட்ரீஸ் போன்றவை எந்தப் பகுதியில் ஆரம்பித்தாலும் அவற்றிற்கு சலுகை அளிக்கப்பட வேண்டுமென்று அரசு உத்தரவிட்டிருக்கிறது. மதுராந்தகம், பொன்னேரி, கும்மிடிப்பூண்டி வட்டங்கள் செங்கற்பட்டு மாவட்டத்தில் பின்தங்கிய வட்டங்கள் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

போளூர் ஒன்றியத்திலுள்ள படைவீடு, சேசவபுரம் பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம்.

*475—(வினா எண் 7234) திரு. இல. பலராமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு போளூர் ஒன்றியப் படைவீடு, கேசவபுரம் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளதா ?

(ஆ) இதன் பேரில், எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆணைப் பிறப்பிக்கவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.